## பாரிய கொழும்பு நகர்ப்புற போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டத்தின் (வெளிச் சுற்றுவட்ட நெடுஞ்சாலைகள் செயற்திட்டம்) III ஆம் கட்டம் - 2014

---

பாரிய கொழும்பு நகர்ப்புற போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டத்தின் (வெளிச் சுற்றுவட்ட நெடுஞ்சாலைகள் செயற்திட்டம்) III ஆம் கட்டத்தினது 2014 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், மேற்கொள்ளப்பட்டது. சீனாவின் எக்ஸிம் வங்கி மற்றும் இலங்கை அரசாங்கம் ஆகியவற்றின் நிதியைப் பயன்படுத்தி கடவத்தை தொடக்கம் கெரவலப்பிட்டிய வரையிலான 9.32 கிலோமீட்டர் தூர வெளிச் சுற்றுவட்ட நெடுஞ்சாலைப் பிரிவை நிர்மாணிப்பதற்கு இச் செயற்திட்டம் அமுலாக்கப்பட்டது. செயற்திட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு 2014 செப்தெம்பர் 16 ஆந் திகதியன்று சீனாவின் எக்ஸிம் வங்கிக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையே உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்ட அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலம் என்பன

---

செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நெடுஞ்சாலைகள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சும் தற்போதைய உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சும் செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவர்கள் ஆகும். மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர் ஆகும். கொழும்பு நகர்ப்புறப் பிராந்தியத்தில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக தெற்கு அதிவேகப் பாதை மற்றும் கொழும்பிலிருந்து விரிந்து செல்லும் ஏனைய தேசிய வீதிகளை கொழும்பைச் சூழவுள்ள வெளிப்புறங்களுடன் இணைப்பதற்கான அதிவேகப் பாதை ஒன்றை நிர்மாணிப்பதே செயற்திட்டத்தின் நோக்கமாகும். இதன் மூலம் நாட்டின் ஏனைய பிராந்தியங்களுடனான தொடர்பு அதிகரிக்க ஏதுவாகும். செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 75,900 மில்லியனுக்கு நிகரான 583 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும். இதில் ரூபா 63,356 மில்லியனுக்கு நிகரான 487 மில்லியன் அமெரிக்க டொலர்கள் சீனாவின் எக்ஸிம் வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடாகியது. III ஆம் கட்டத்தின் கீழான நெடுஞ்சாலையை நிர்மாணிக்கும் வேலை 2014 ஏப்ரல் 01 அன்று ஆரம்பமாகி 42 மாதங்களுக்குள் முடிவுறுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2013 பெப்ரவரி 22 அன்று ஒப்பந்தம் வழங்கப்பட்டு 2016 ஜுலை மாதமளவில் வேலை முடிவுறுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

-----------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு ஏற்ப நான் கணக்காய்வை மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிசார் கூற்றுக்களில் காணப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட உயரளவு நிதிசார் அறிக்கைகள் மற்றும் செயன் முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டுள்ளனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றம் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்ளவனவுகளை இனங்காணல் என்பவற்றை தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிசார் கூற்றுக்கள்

## 2.1 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கங்களின் தாக்கங்களைத் தவிரவும்,

(அ) செயற்திட்டமானது 2014 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதி அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகிறேன்.

## 2.2 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வெளிச் சுற்றுவட்ட நெடுஞ்சாலைகள் செயற்திட்டம் கட்டம் I க்கு செயற்திட்டத்தால் பேணப்பட்ட நடைமுறைக் கணக்கின் மீதியான ரூபா 1,980,769,681 இச் செயற்திட்டத்திற்கென வெளிச்சுற்றுவட்ட நெடுஞ்சாலைகள் செயற்திட்டம் - கட்டம் I பேணி வந்த நடைமுறைக் கணக்கு மீதியான ரூபா 1,981,295,504 உடன் இணக்கமுறவில்லை.

(ஆ) துளையிடுதல் தொடர்பான விசாரணைகளுக்கு வெளிச் சுற்று வட்ட நெடுஞ்சாலைகள் செயற்திட்டம் - கட்டம் 1 க்கு 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு கொடுப்பனவு செய்ய வேண்டியிருந்த ரூபா 3,569,788 கணக்கிற்கு கொண்டுவரப்படவில்லை.

(இ) நிதிசார் கூற்றுக்களில் காணப்பட்ட நிலையான சொத்துக்களின் பெறுமதி வெளிச் சுற்றுவட்ட நெடுஞ்சாலைகள் செயற்திட்டம் கட்டம் - 1 மூலம் மாற்றஞ் செய்யப்பட்ட சொத்துக்களை மாத்திரமே பிரதிநிதித்துவப்படுத்தின. ஏனைய செயற்திட்டங்களிலிருந்து மாற்றஞ் செய்யப்பட்ட ஏனைய சொத்துக்களின் பெறுமதி நிர்ணயிக்கப்பட்டுச் செயற்திட்டத்தின் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மற்றும் பௌதீகச் செயலாற்றல்

### 3.1 நிதிப் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டின் போதிலான வரவு, செலவுத்திட்டமிடப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட மற்றும் 2014 டிசெம்பர் 31 வரை உள்ளவாறான நிதி என்பவற்றினது சில குறிப்பிடத்தக்க புள்ளி விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | பயன்படுத்தப்பட்ட நிதி | | | |
| தோற்றுவாய் | கடன் உடன்படிக்கைகளில் நிதியளிப்பிற்கு உடன்பாடாகிய தொகை | | மீளாய்வாண்டிற்கான வரவு, செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு | 2014 ஆம் ஆண்டின் போது | | 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | அமெரிக்க டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | அமெரிக்க டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | அமெரிக்க டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| கடன் | 487 | 63,356 | - | - | - | - | - |
| இலங்கை அரசாங்கம் | 96 | 12,544 | 1,374 | 6 | 756 | 34 | 4,407 |
| | 583 | 75,900 | 1,374 | 6 | 756 | 34 | 4,407 |

### 3.2 பௌதிக முன்னேற்றம்

சிவில் வேலைகளுக்கான ஒப்பந்தம் 2013 பெப்ரவரி 22 ஆந் திகதியன்று வழங்கப்பட்டிருந்த போதும், 2014 டிசெம்பர் 31 வரையிலேதும் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாதிருந்தன. மீளாய்வாண்டின் போது விரிவான பட வரையும் சேவைகள் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்தன.

### 3.3 சர்ச்சைக்குரிய விடயங்கள்

வெளிநாட்டு நிதிகளின் மூலமான செயற்திட்டங்களுக்கு பெறுமதி சேர் வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ள போதும், 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், பெறுமதி சேர் வரி அடங்கலாக ரூபா 23.76 மில்லியன் முற்பணம் உசாத்துணையாளர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

### 3.4 சட்ட பூர்வ சுவீகரிப்பும் மீள்குடியமர்வு நடவடிக்கைகளும்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(அ) சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்குக் கொடுப்பனவு தாமதிக்கப்பட்டமையால் ரூபா 226.62 மில்லியன் கூட்டுத் தொகையான வட்டி மீளாய்வாண்டின்போது செயல் திட்டத்தால் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 309.45 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட வேண்டியுமிருந்தது.

(ஆ) 2007 பெப்ரவரியில் ரூபா 28 மில்லியனுக்குச் செயற்திட்டத்தால் சுவீகரிக்கப்பட்ட வத்தளையில் உள்ள மில்லகஹவத்த, ஹீன்கெந்தவில் உள்ள 2.6348 ஹெக்டயர்ஸ் காணி அந் நாள் முதலாகப் பயன்படுத்தப்படாதிருந்தது. அதனை இடம் பெயர்ந்தோருக்கிடையே விநியோகிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மேலும், அதனை அபிவிருத்தி செய்வதற்கு ரூபா 30.62 மில்லியன் செலவிடப்பட்டுமிருந்தது. காணியானது 57 துண்டுகளாகப்

பிரிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இடம் பெயர்ந்தோருக்கிடையே இக் காணித்துண்டுகள் 2014 டிசெம்பர் 31 வரை பகிர்ந்தளிக்கப்படாதிருந்தன.

(இ) கடவத்தையில் உள்ள ஜயசுமண வத்த எனும் மற்றுமொரு காணி III ஆம் கட்டத்திற்காக வெளிச் சுற்று வட்ட நெடுஞ்சாலைகள் செயற்திட்டம் கட்டம் II மூலம் ரூபா 96 மில்லியன் கிரயத்தில் சுவீகரிக்கப்பட்டிருந்தது. இக்காணியை அபிவிருத்தி செய்வதற்கு ரூபா 4.71 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இடம்பெயர்ந்தோரை மீள் குடியமர்த்துவதற்கு மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படாதிருந்தது.

(ஈ) நெடுஞ்சாலையை அமைப்பதற்காக செயற்திட்டத்தால் சுவீகரிக்கப்பட்ட காணியொன்றிற்கு நட்ட ஈடு வழங்கும் முகமாக மத்துமகல கருணாரட்ண பௌத்த மஹா வித்தியாலயத்திற்குச் சொந்தமான கட்டிடம் ஒன்றை மீள நிர்மாணிப்பதற்கு செயற்திட்டத்தால் ரூபா 53.45 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், காணியின் உரித்துறுதி, அங்கீகரிக்கப்பட்ட கட்டிடத்திட்டம் மற்றும் ஏனைய தொடர்புடைய ஆவணங்கள் கணக்காய்விற்குக் கிடைக்குமாறு செய்யப்படவில்லை. செயற்திட்டத்தால் சுவீகரிக்கப்பட்ட காணியில் அச்சமயம் இருந்த கட்டிடத்தைத் தகர்த்து காலியாக உள்ள காணியை ஆறு மாதத்திற்குள் செயற்திட்டத்திற்கு கையளிப்பதற்குக் கல்விப் பணிப்பாளர் உடன்பட்டிருந்த போதும், கட்டிடம் தகர்க்கப்படாததுடன் நட்ட ஈடு வழங்கப்பட்டு 20 மாதங்களாகியும் செயற்திட்டத்திற்கு காணி கையளிக்கப்படாதிருந்தது. மேலும், 4 மாடிக் கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கான கட்டிடத் திட்டம் பின்னர் சர்ச்சைக்குரிய விதத்தில் 3 மாடிக் கட்டிடமாக மாற்றஞ் செய்யப்பட்டிருந்தது. கொள்வனவு வழிகாட்டிக் கைநூலின் ஏற்பாடுகளுக்கு முரணாக மேல் மாகாணக் கல்வித் திணைக்களத்தால் பெயரிட்டப்பட்ட 3 ஒப்பந்தகாரர்களிடமிருந்து மட்டுப்படுத்தப்பட்ட கூறு விலைகள் கோரப்பட்டிருந்தன.

## 3.5 மனிதவள முகாமைத்துவம்

--------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டப் பதவியணி 2013 ஏப்ரல் 5 முதல் அமுலுக்கு வரும் பொருட்டு 2014 ஏப்ரல் 02 ஆம் திகதியன்றே முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஏப்ரல் 5 ஆந் திகதிய 33 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கையின் 2(1) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு முரணாக வீதி அபிவிருத்தி அதிகார சபையிலிருந்து விடுவிக்கப்பட்ட பதவியணியினருடன் 2013 நவம்பர் 5 ஆந் திகதி முதல் III ஆம் கட்ட செயற்திட்ட மேற்பார்வைக் கூறின் செயற்பாடுகள் ஆரம்பமாகியிருந்தது.

(ஆ) மீள்குடியமர்வு உதவியாளர் ஒருவருக்கு ரூபா 80,985 படியாக வழங்கப்பட்டிருந்தது. 2007 ஏப்ரல் 07 ஆந் திகதிய டீஎம்எஸ் 33 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் பிரகாரம் அவ்வாறான படியைப் பெறுவதற்கு அவர் அருகதையற்றவராவர்.

(இ) ஆட்சேர்ப்பு நடைமுறைகளைக் கடைப்பிடிக்காது ஒன்பது உள்ளூர் உசாத்துணையாளர்கள் ஆட்சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டின் போது ஊதியமாக ரூபா 2.96 மில்லியன் மற்றும் வாகன வாடகைக் கட்டணமாக ரூபா 4.57 மில்லியன் என வழங்கப்பட்டிருந்தது. அந்த உசாத்துணையாளர்களது வேலைப் பிரமாணத்திற்கேற்ப குறித்த வேலைகள் அமையாததால் செயலாற்றலை அளவிட முடியாதிருந்தது. இதன் விளைவாக, அந்த உசாத்துணையாளர்களால் ஏற்பட்ட நலன் மற்றும் அவர்களது பங்களிப்பு என்பவற்றைக் கணக்காய்வில் நிர்ணயிக்க முடியாதிருந்தது.

(ஈ) செயற்திட்டப் பதவியணியினரது சம்பளமானது 2007 ஏப்ரல் 5 ஆந் திகதிய 33 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட சம்பளத்தின் அடிப்படையில் அல்லாது வீதி அபிவிருத்தி அதிகாரசபை அறிமுகஞ் செய்து வைத்த முறைக்கமையவே வழங்கப்பட்டிருந்தது. இதன் விளைவாக, மீளாய்வாண்டின்போது கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்த தொகை ரூபா 408,070 ஆகும்.